# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 258/18 — 1977 අප්‍රේල් 01 වැනි සිකුරාදා — 1977.04.01

258/18 ஆம் இலக்கம்—1977 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வெ.பி.—4/77

### (61 ம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டம்

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 16ஆ என்னும் பிரிவின்கீழ், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரி. பி. இலங்கரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1977 மார்ச் 31.

### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் மகவேற்பு ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்திதன்மேல் " கட்டளைச் சட்டம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் 10 (5) (அ) என்னும் பிரிவின்கீழ் மகவேற்கப்பட்ட பிள்ளையின் பெயர் அல்லது மகவேற்பவரின் அல்லது மகவேற்பவர்களின் பெயர் அல்லது பெயர்கள் பற்றிய மகவேற்பு இடாப்பிலுள்ள விபரங்களை வேறுபடுத்தும்படி பணிக்கின்ற கட்டளை ஒன்றைப் பெறுவதற்கென பதிவாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பம் ஒவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள " அ " என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

3. ஏதேனும் நிகழ்வு விடயம் அல்லது பொருட் விடயம் பற்றிய மகவேற்பு இடாப்பில் உள்ள ஏதேனும் பதிவீட்டில் உள்ள எவையேனும் விபரங்களில் காணப்படும் ஏதேனும் பிழையைச் சரியாக்குவதற்காக கட்டளைச் சட்டத்தின் 10 (5) (ஈ) என்னும் பிரிவின் கீழ்ப் பதிவாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் எழுத்திலான வெளிப்படுத்தல் ஒவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் காட்டப்பட்ட " ஆ " என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

4. மகவேற்கப்பட்ட பிள்ளையொன்றின் பிறப்பினை மீளப்பதிவு செய்வதற்காகக் கட்டளைச் சட்டத்தின் 10ஆ (1) என்னும் பிரிவின்கீழ்ப் பதிவாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் எழுத்திலான வெளிப்படுத்தல் ஒவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் காட்டப்பட்ட " இ " என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

5. இதற்கான அட்டவணையின் " இ " என்னும் படிவத்தில் வெளிப்படுத்தலைச் செய்கின்ற வாழ்க்கைத் துணைவர்கள் அந்த வெளிப்படுத்தலானது எந்தப் பிள்ளை தொடர்பில் செய்யப்பட்டுள்ளதோ அந்தப் பிள்ளையை மகவேற்பதற்கு நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள் என்று பதிவாளர் தலைமையதிபதி திருப்தியடைகின்றவிடத்து, அவர், இதற்கான அட்டவணையில் உள்ள " இ " என்னும் படிவத்தில் தரப்பட்ட கருமங்கள் பற்றிய இயைபான விபரங்களை உட்புகுத்துவதன் மூலம், பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் கீழ் பிறப்புகளைப் பதிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடாப்பில் அந்தப் பிள்ளையின் பிறப்பினை மீளப்பதிவு செய்யும்படி, அந்தப் பிள்ளையின் பிறப்பானது எந்தப் பெரும்பாகத்தில் நிகழ்ந்துள்ளதோ அந்தப் பெரும்பாகத்தின் பதிவாளரைப் பணித்தல் வேண்டும். அத்துடன் பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தில் பிள்ளையொன்றின் பிறப்பினைப் பதிதல் பற்றிய எல்லா ஏற்பாடுகளும், இந்தக்கட்டளைச் சட்டத்தின் கீழ் மகவேற்கப்பட்ட பிள்ளையொன்றின் பிறப்பினை மீளப்பதிதல் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. மகவேற்கப்பட்ட பிள்ளையொன்றின் பிறப்பானது இந்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டுள்ளவிடத்து, பதிவாளர் தலைமையதிபதி மகவேற்பு இடாப்பில் அந்தப் பிள்ளையைப் பற்றியதான இயைபான பதிவேட்டை அவ்விடாப்பின் ஓரத்தில் சிவந்த மையினுல் குறிப்பித்தல் வேண்டும் என்பதோடு, " பிறப்பு மீளப்பதிவு செய்யப்பட்டது " என்ற சொற்களை இடுவதோடு கீழே காணும் விபரங்களையும் கொடுத்தல் வேண்டும்:—

(அ) பிறப்பானது எந்தப் பெரும்பாகத்தில் மீளப்பதிவு செய்யப்பட்டது என்பது ;

(ஆ) பிறப்பு மீளப்பதிவுப் பதிவேட்டின் தேதியும் இலக்கமும்.

அத்தகைய விபரங்கள் பதிவாளர் தலைமையதிபதியினுல் அல்லது அதற்கென அவரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினுல் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

அட்டவணை

படிவம் " அ "

**மகவேற்புக் கட்டளைச் சட்டம் 10 (5) (அ) ஆம் பிரிவு**

*மகவேற்கப்பட்ட பிள்ளையின் பெயரை/*மகவேற்பவரின் பெயரை அல்லது பெயர்களை மாற்றுவதற்கான விண்ணப்பம்

(இந்த விண்ணப்பமானது, மகவேற்கப்பட்ட பிள்ளை 21 வயதுக்கு மேற்பட்டதானுல் அப்பிள்ளையினுல் அல்லது அப்பிள்ளையின் மகவேற்பவரால் அல்லது மகவேற்பவர்களால் செய்யப்படலாம்).

*மகவேற்கப்பட்ட பிள்ளையாக/*மகவேற்றவராக/மகவேற்றவர்களாக இருப்பவரும் ............ என்ற முகவரியில் வதிபவரும், 19 ...... என்று தேதியிடப்பட்ட ...... ஆம் இலக்க மகவேற்பு இடாப்புப் பதிவேட்டில் (அப்பதிவேட்டின் பிரதியொன்று இதனோடு இணைக்கப்பட்டுள்ளது) குறிப்பீடு செய்யப்பட்டிருப்பவரும் ஆன ........ ஆகிய நான்/நாம் 3/5* ஆகிய கூடுகளில் கொடுக்கப்பட்டிருந்த விபரங்கள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன என்று இத்தால் கூறுகின்றேன்/கூறுகின்றேம்.

கூடு : 3 :————

கூடு : 5 :—(அ) ————

(ஆ) ————

மேலே கூறப்பட்ட மாதிரியாகப் பதிவேட்டினை மாற்றுவதற்காக நான்/நாம்*இத்தால் விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறேம்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

பதிவாளர் தலைமையதிபதியினுல் ஆக்கப்பட்ட கட்டளை மாற்றமானது அதிகாரமளிக்கப்படுகின்றது/அதிகாரமளிக்கப்படவில்லை.

————
பதிவாளர் தலைமையதிபதி/
உதவிப்பதிவாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
தேதி :————.

*பொருந்தாத சொற்களை விட்டு விடுக

படிவம் " ஆ "

**மகவேற்புக் கட்டளைச் சட்டம் பிரிவு 10 (5) (ஈ)**

மகவேற்பு இடாப்பில் உள்ள பதிவேட்டில் உள்ள எவையேனும் விபரங்களில் காணப்படும் **ஏதேனும் பிழையைத்** திருத்துவதற்கான வெளிப்படுத்தல்

(இந்த வெளிப்படுத்தலானது, மகவேற்கப்பட்ட பிள்ளை 21 வயதுக்கு மேற்பட்டதானுல் அப்பிள்ளையினுல், அல்லது அப்பிள்ளையின் மகவேற்பவரால் அல்லது மகவேற்பவர்களால் செய்யப்படலாம்).

மகவேற்கப்பட்ட பிள்ளையாக/மகவேற்றவராக அல்லது மகவேற்றவர்களாக இருப்பவரும்/இருப்பவர்களும் ...... என்ற முகவரியில் வதிபவரும்/வதிபவர்களும் 19 ...... என்று தேதியிட்ட ...... ஆம் இலக்க மகவேற்பு இடாப்புப் பதிவீட்டில் (அப்பதிவீட்டின் பிரதியொன்று இதனோடு இணைக்கப்பட்டுள்ளது) குறிப்பீடு செய்யப்பட்டிருப்பவரும்/குறிப்பீடு செய்யப்பட்டிருப்பவர்களும்* ஆன ........ ஆகிய நான்/நாம் மகவேற்பு இடாப்பிலுள்ள பதிவீட்டில் உள்ளனவும் கீழே 1 ஆம் கூட்டில் விபரிக்கப்பட்டனவுமான பின்வரும் விபரங்கள் பிழையாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டன என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்/வெளிப்படுத்துகிறேம் என்பதோடு, கீழே 5 ஆம் கூட்டிலே கொடுக்கப்பட்டவாறு விவரங்களை *உட்புகுத்துமாறு/*மாற்றுமாறு/விட்டுவிடுமாறு நான்/நாம்* இத்தால் விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறேம்.

(1) மகவேற்பு இடாப்பில் உள்ள பதிவீட்டின் விபரணம்—

(i) பதிவீட்டின் எண் : ————

(ii) பதிவீட்டுத் தேதி : ————

(2) வெளிப்படுத்தலானது மாற்றுவதற்கா/உட்புகுத்துவதற்கா/விட்டுவிடுவதற்கா என்பது—

(3) மகவேற்பு இடாப்பின் பதிவீட்டில், மாற்றம்/உட்புகுத்தல்/விட்டுவிடல் எந்தக்கூட்டில்/கூடுகளில் செய்யப்படவுள்ளதோ அந்தக் கூட்டின்/கூடுகளின் இலக்கம் :————.

(4) மேலே 3 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட கூடுகளில் ஒவ்வொன்றிலும் பதிவு செய்யப்பட்டுள்ளவாறுன விபரங்கள் :————.

(5) மேலே 3 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட கூடுகளில் ஒவ்வொன்றிலும் செய்யும்படி வேண்டப்பட்டுள்ள மாற்றத்தின்/உட்புகுத்தலின்/விட்டுவிடுதலின் தன்மை :————.

————,
வெளிப்படுத்துநரின் கையொப்பம்.

இடம் :————.
தேதி :————.

————,
வெளிப்படுத்துநர் வெளிப்படுத்தலை
என்ன தகைமையில் செய்கிருர் என்பது.

19 ...... மாதம் ...... ஆம் தேதியாகிய இன்று ...... இல் எனது முன்னிலேயில் வெளிப்படுத்தப்பட்டது.

————,
பதிவாளர் தலைமையதிபதி/உதவிப்
பதிவாளர் தலைமையதிபதி/மாவட்டத்தின்
மேலதிக மாவட்டப் பதிவாளர்/சமாதான நீதவான்.

**பதிவாளர் தலைமையதிபதியினுல் ஆக்கப்பட்ட கட்டளை**

உட்புகுத்துகை/மாற்றம்/விட்டுவிடுகை அதிகாரமளிக்கப்படுகின்றது/அதிகாரமளிக்கப்படவில்லை.

————,
பதிவாளர் தலைமையதிபதி/உதவிப்பதிவாளர்.
தலைமையதிபதி.

*பொருந்தாத சொற்களை விட்டுவிடுக.

படிவம்—" இ "

**மகவேற்புக் கட்டளைச் சட்டம்—பிரிவு 10ஆ (1)**

மகவேற்கப்பட்ட பிள்ளையொன்றின் பிறப்பை மீளப்பதிவு செய்வதற்கான வெளிப்படுத்தல்.

............ இல் வதிகின்ற .......... என்பவரும் ............ஆகிய நாங்கள் ............ ............. என்று தேதியிட்ட மகவேற்பு இடாப் .............. என்னும் பெயருடையதும் ................ பின் ........ ஆம் பதிவீட்டில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான பிள்ளையை மகவேற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளோம் என்றும் அப்பிள்ளையின் பிறப்பை மீளப் பதிவு செய்வதற்கு விரும்புகின்ருேம் என்றும் இதன் பின்னுற் தரப்பட்ட விபரங்களை உட்புகுத்துவதன் மூலம் அப்பிள்ளையின் பிறப்பை மீளப்பதிவு செய்வதற்கென இத்தால் விண்ணப்பமும் செய்கின்ருேம்.

1. பிறந்த தேதியும் இடமும்[1] : ————.
   பதிவுப் பிரிவும் அதன் மாவட்டமும் : ————.

2. பெயர் : ————.

3. பால் : ————.

4. தகப்பன்
   - முழுப் பெயர் : ————.
   - பிறந்த தேதி : ————.
   - பிறந்த இடம் : ————.
   - சாகியம்[2] : ————.
   - அந்தஸ்து அல்லது தொழில் : ————.

5. தாய்
   - முழுப் பெயர் : ————.
   - பிறந்த தேதி : ————.
   - பிறந்த இடம் : ————.
   - சாகியம்[2] : ————.
   - வதியுமிடம்* : ————.
   - வயது* : ————.

6. பெற்ருேர் விவாகஞ் செய்தவர்களா* ? : ————.

7. பாட்டன் இலங்கையிற் பிறந்தவராயின் அவரது
   - முழுப் பெயர் : ————.
   - பிறந்த வருடம் : ————.
   - பிறந்த இடம் : ————.

8. தகப்பன் இலங்கையிற் பிறக்காமல் பூட்டன் இலங்கையிற் பிறந்திருந்தால் பூட்டன்
   - முழுப் பெயர் : ————.
   - பிறந்த வருடம் : ————.
   - பிறந்த இடம் : ————.

9. வெளிப்படுத்துபவர்களின் முழுப் பெயர்களும், வதிவிடமும் எத்தன்மையில் தகவல் கொடுக்கிறார்கள் என்பதும் : ————.

ஐந்து ரூபா
முத்திரை

வெளிப்படுத்துபவர்களின் கையொப்பங்கள் : 1.————.

2.————.

19........ ஆம் ஆண்டு ........ மீ ........ ந் தேதியன்று ........ ல் என் முன்னிலையில் வெளிப்படுத்தினார்கள்.

————,
உதவிப் பதிவாளர் தலைமை அதிபதி/பதிவாளர் தலைமை அதிபதி/சமாதான நீதவான்.

---

**கட்டளை**

இந்த அறிவித்தலில் விவரங் காட்டப்பட்டிருக்கிற பிறப்பை ................ மாவட்டத்தின் ................ பிரிவின் பிறப்பு பதிவுக்காரர் பதிவு செய்யும்படி இத்தால் கட்டளையிடப்படுகின்றார்.

————,
உதவிப் பதிவாளர் தலைமை அதிபதி.

பதிவாளர் தலைமை அதிபதி அலுவலகம்,
கொழும்பு,
தேதி : ————.

(பதிவுக்காரர் நிரப்புவது) பதிவு இலக்கமும் பதிவு செய்யும் தேதியும் : ————.

---

*இவ்விடயங்களில் நிரப்பப்பட வேண்டிய விவரங்கள் பிள்ளை பிறந்த காலத்திலுள்ள விவரங்களாயிருத்தல் வேண்டும்.

[1] ஆண்டின் கடைசிப் பகுதியும் மாதமும் உட்பட தேதி சம்பந்தமான எல்லா விவரங்களையும் எழுத்தில் குறிப்பிடுக. (உ-ம்) 1953 ம் (ஐம்பத்தி மூன்று) ஆண்டு சனவரி முதலாந் தேதி.

[2] தமிழர் அல்லது சோனகரை "இலங்கைத் தமிழர்" அல்லது "இலங்கைச் சோனகர்" அல்லது "இந்தியத் தமிழர்" அல்லது "இந்தியச் சோனகர்" என விவரித்தல் வேண்டும்.

குறிப்பு : (1) படிவத்துடன் வெளிப்படுத்துபவர்களின் விவாகப் பதிவுப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

(2) வெளிப்படுத்தலில் 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு வெளிப்படுத்துபவர்களினால் செல்லுபடியற்றதாக்கப்படல் வேண்டும்.

4–332

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது